RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 40 | பிப்ரவரி.16 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# புதிய கட்சி தொடங்குகிறாரா சசிகலா? பிப்.24ல் பசும்பொன்னில் சசிகலா தலைமையில் பொதுக்கூட்டம்!

ராமநாதபுரம்: பிப்.16-

பிப்.24ல் பசும்பொன்னில் சசிகலா தலைமையில் ஜெயலலிதா பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்காக அவரது ஆதரவாளர்களால் பந்தக்கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் சசிகலா புதிய கட்சி தொடங்குகிறாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப்பின் அதிமுகவின் பொதுச்செயலாளரான வி.கே. சசிகலா, 2017ல் ஊழல் வழக்கில் சிறை சென்றதால், அந்த பதவியை எடப்பாடி பழனிசாமி கைப்பற்றினார். அதன்பின் டிடிவி.தினகரன், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் போன்றோர் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டனர்.

2021ல் சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சசிகலாவை அதிமுகவில் சேர்க்கவில்லை. அதன் பின்னரும் தான் அதிமுகவின் பொதுச்செயலாளர், அதிமுகவில் இருந்து பிரிந்து சென்ற அனைவரையும் ஓரணியில் இணைத்து, ஜெயலலிதாவின் ஆட்சியை கொண்டு வருவேன் என கூறி அமைதியாக இருந்து வந்தார்.

இந்நிலையில் வரும் சட்டப்பேரவை தேர்தலுக்குள் அதிமுகவிலிருந்து பிரிந்து சென்ற தலைவர்கள் மீண்டும் இணைக்கப்படுவர் என எதிர்பார்த்தனர். ஆனால் சசிகலா, டிடிவி.தினகரன், ஓபிஎஸ் ஆகியோரை அதிமுகவில் இணைக்க முடியாது என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். இதன் தொடர்ச்சியாக, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் மட்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்க்கப்பட்டார்.

அமைதியாக இருந்த சசிகலா கடந்த சில மாதங்களாக அவ்வப்போது அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். கடந்த அண்ணா பிறந்தநாளின்போது திமுகவை வீட்டுக்கு அனுப்பி மக்கள் விரும்பும் ஆட்சியை கொண்டு வருவேன் என்றார். கடந்த வாரம் முதல் சென்னை போயஸ் கார்டனில் உள்ள வீட்டில் தனது ஆதரவாளர்களை சந்தித்து வருகிறார்.



அதிமுகவில் தனக்கு இடமில்லை எனத் தெரிந்துவிட்டதால் சசிகலா புதிய கட்சி தொடங்கப்போவதாக அவரது ஆதரவாளர்கள் கூறி வருகின்றனர்.

இதுவரை பொது வெளியில் கூட்டம், மாநாடு போன்ற எதையும் நடத்தாத சசிகலா, வரும் 24ம் தேதி ஜெயலலிதாவின் பிறந்த நாளில் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் ஜெயலலிதா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை நடத்த உள்ளார்.

இதற்காக பசும்பொன் அருகே கோட்டைமேடு பகுதியில் பொதுக்கூட்ட மேடை அமைப்பதற்கான பந்தக்கால் நடும் நிகழ்ச்சி இன்று (பிப்.15) காலை நடைபெற்றது. இதில் பங்கேற்ற அனைவரும் முன்னதாக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனையடுத்து பசும்பொன் முன்னாள் ஊராட்சி தலைவர் ராமகிருஷ்ணன் தலைமையில் அங்குள்ள மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் ஓய்வுபெற்ற ஏடிஎஸ்பி வெள்ளைத்துரை, சமீபத்தில் அமமுகவிலிருந்து விலகிய ஜீவிதா நாச்சியார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஓய்வுபெற்ற ஏடிஎஸ்பி வெள்ளைத்துரை பேசும்போது, "இப்பொதுக்கூட்டத்தில் 25 ஆயிரம் பேர் பங்கேற்க உள்ளனர். இதில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்படும்" என்றார்.

பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவின் ஒருங்கிணைப்பாளரான பசும்பொன் முன்னாள் ஊராட்சி தலைவர் ராமகிருஷ்ணன் கூறும்போது, "வரும் 24ம் தேதி ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு சசிகலா தலைமையில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் நடைபெற உள்ளது. புதிய கட்சி தொடங்குகிறாரா? வேட்பாளர் அறிவிப்பா?, கூட்டணி ஏதும் உண்டா? போன்ற கேள்விகளுக்கு சசிகலா தான் தெரிவிப்பார்" என கூறினார்.

## நாடு முழுவதும் உள்ள அரசு கல்லூரிகளில் கூடுதலாக 10,023 மருத்துவ இடங்களுக்கு ஒப்புதல்

புதுடெல்லி, பிப்.16-

அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 10,023 இடங்களை அதிகரிக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் மருத்துவர்களின் பற்றாக் குறையை சமாளிக்க, அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 10,023 இடங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எம்பிபிஎஸ் படிப்புக்கு 5,023 இடங்கள் மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புக்கு 5,000 இடங்கள் ஒதுக்கப்படும். இதன் மூலம் இந்தியாவில் மருத்துவக் கட்டமைப்பு அதிகரிக்கும்.

மத்திய அரசின் 3ம் கட்ட திட்டத்தின் கீழ் கூடுதல் மருத்துவ இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகள் அதிகரிக்கும். இந்த கூடுதல் இடங்கள் 2025 2026ம் ஆண்டு முதல்



2028 2029ம் ஆண்டுக்குள் அமல்படுத்தப்படும். இந்தக் கூடுதல் இடங்களை உருவாக்க ஒவ்வொரு இடத்துக்கும் ரூ.1.50 கோடி செலவிடப்படும். அந்தத் தொகையில் அரசு மருத்துவக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள், ஆய்வகங்கள், கருவிகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதன்படி, திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கும்படி மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளோம். இந்தப் புதிய திட்டத்தில் கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை அதிகரிக்கும் அதேவேளையில், விதிமுறைகள், சீர்திருத்தங்களை தேசிய மருத்துவ ஆணையம் அறிமுகப்படுத்தி உள்ளது. அதில் மேம்பட்ட மருத்துவக் கல்வி, ஆசிரியர்கள் நியமனம், அவர்களுக்கான தகுதி வரையறை போன்றவை குறித்து விரிவான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் மருத்துவப் படிப்புக்கான இடங்களுக்கு அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் விண்ணப்பிக்கின்றனர். தற்போது கூடுதலாக 10,023 இடங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதால், மருத்துவ மாணவர் சேர்க்கையின் போது கணிசமான இடங்கள் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.


## 'AI உச்சி மாநாட்டை நடத்த இந்தியாவே சரியான இடம்' ஐ.நா பொதுச் செயலாளர்

புதுடெல்லி, பிப்.16-

"உலக விவகாரங்களில் அதிக செல்வாக்கு செலுத்தும் "மிகவும் வெற்றிகரமான" வளர்ந்து வரும் பொருளாதாரம் இந்தியா. எனவே ஏஐ (AI) உச்சிமாநாட்டை நடத்த சரியான இடம் இதுதான்" என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

பிப்ரவரி 16 முதல் பிப்ரவரி 20 வரை நடைபெறும் இந்தியா ஏஐ தாக்க உச்சி மாநாடு, உலகத் தெற்கில் நடத்தப்படும் முதல் கிமி உச்சி மாநாடாகும். இது 'மக்கள், உலகம் மற்றும் முன்னேற்றம்' என்ற மூன்று வழிகாட்டும் கொள்கைகளுடன் நடத்தப்படுகிறது.

ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னதாக ஐ.நா. தலைமையகத்தில் பேசிய குட்டரெஸ், "இந்த உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்ததற்காக இந்தியாவை நான் மனதார வாழ்த்துகிறேன். அனைவருக்கும், எல்லா இடங்களிலும் நன்மை பயக்கும் வகையில்



ஏஐ தன்னை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம். மேலும் உலகளாவிய தெற்கில் உள்ள நாடுகள் ஏஐ இன் நன்மைகளைப் பெறுவதில் ஒரு பகுதியாக இருப்பதும் மிகவும் அவசியம்.

ஏஐ மிகவும் வளர்ந்த நாடுகளின் ஒரு சலுகையாகவோ அல்லது இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலான பிரிவாகவோ இருப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று தெரிவித்தார். இது அமெரிக்கா மற்றும் சீனாவைக் குறித்து அவர் பேசிய கருத்தாக உள்ளது.

மேலும், "ஏஐ மனிதகுலத்தின் நலனுக்காக ஒரு உலகளாவிய கருவியாக மாறுவது முற்றிலும் அவசியம். உலகப் பொருளாதாரத்தில் மட்டுமல்ல, உலக விவகாரங்களிலும், அதன் செல்வாக்கிலும் பெரிய பங்களிப்பைக் கொண்ட மிகவும் வெற்றிகரமான வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளது. எனவே, இந்த உச்சிமாநாட்டை நடத்துவதற்கும், ஏஐயின் மகத்தான ஆற்றல் மற்றும் அதன் அனைத்து ஆபத்துகள் குறித்து ஆழமாக விவாதிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், ஏஐ முழு உலகிற்கும் என்பதை உறுதி செய்வதற்கும் இந்தியா சரியான இடம்.

உலகில் நாம் தவிர்க்க வேண்டிய இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒரே ஒரு சக்தி அல்லது உலகம் இரண்டு வல்லரசுகளுக்கு இடையில் பிரிக்கப்பட்ட ஒரு அமைப்பின் முழுமையான மேலாதிக்கத்தை நாம் தவிர்க்க வேண்டும். உலகின் பன்முகத்தன்மைக்கு, வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் உயர்ந்த பங்கைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான சமீபத்திய வர்த்தக ஒப்பந்தம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

உலகம் முழுவதும், அனைத்து வளர்ந்த நாடுகளும், வளர்ந்து வரும் பொருளாதாரங்களும் எந்த மேலாதிக்கமும் இல்லாமல் உண்மையான பன்முகத்தன்மையை உருவாக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலால் முடிவுகளை எடுக்க முடியாமல் போகும்போது எனக்கு ஏற்படும் விரக்தியை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம்.

மேலும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இன்று உலகைப் பிரதிநிதித்துவப்படுத்த, பாதுகாப்பு கவுன்சிலின் அடிப்படை சீர்திருத்தம் நமக்குத் தேவை என்பது தெளிவாகிறது. இதன் மூலம் உலகம் முழுவதும் அமைதி மற்றும் பாதுகாப்புக்காக பயனுள்ள முடிவுகளை எடுக்க முடியும்.

இந்தியாவை வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் மையமாக நான் காண்கிறேன். மேலும் இந்த பன்முக உலகத்தை வடிவமைப்பதில் இந்தியா வகிக்கக்கூடிய பங்கின் மீது எனக்கு நிறைய நம்பிக்கை இருப்பதால், பிரதமர் மோடியுடன் இதைப் பற்றி விவாதிப்பதில் நான் மகிழ்ச்சியடைவேன்" என்றார்.

இந்த மாநாட்டில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோன், பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா உள்ளிட்ட உலகத் தலைவர்கள் முதல் கூகிள் மற்றும் ஆல்பாபெட் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, அடோப் தலைமை நிர்வாக அதிகாரி சாந்தனு நரேன் மற்றும் ஆந்த்ரோபிக் தலைமை நிர்வாக அதிகாரி டாரியோ அமோடி உள்ளிட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் வரை கலந்துகொள்கின்றனர்.

## ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயற்சி: தமிழக காங். தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் கைது

சென்னை, பிப்.16-

மத்திய பாஜக அரசைக் கண்டித்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்ற காங்கிரஸாரை போலீஸார் கைது செய்தனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத் தில் காந்தியின் பெயரை நீக்கி, அந்த சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதாகக் குற்றம்சாட்டி, மத்திய அரசை கண்டித்து, தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில், ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே நேற்று நடைபெற்றது.

தென் சென்னை மத்திய மாவட்ட காங்கிரஸ் தலைவர்




ஜோதி பொன்னம்பலம் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில தலைவர் செல்வப் பெருந்தகை தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மத்திய அரசைக் கண்டித்து கோஷங்களை எழுப்பினர். பிரதமர் மோடியின் உருவப்படத்தை எரித்தும், தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதைத் தொடர்ந்து பனகல் மாளிகையில் இருந்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிடப் புறப்பட்ட காங்கிரஸாரை போலீஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் செல்வப்பெருந்தகை கூறியதாவது: மத்திய பாஜக அரசு ஜிஎஸ்டி நிதியைச்சரியான முறையில் மாநிலங்களுக்கு வழங்குவதில்லை. பேரிடர் காலங்களில் உரிய நிதி அளிப்பதில்லை. 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் மாநில அரசுகள் 40 சதவீதம் நிதி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனை மூலம் பாஜக ஆளாத மாநிலங்களைப் பழிவாங்க மத்திய அரசு முயல்கிறது. இதை கண்டித்தே போராட்டம் நடத்துகிறோம்.

தமிழகத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் உரிமைத் தொகையைத் தடுக்க பாஜகவும், அதிமுகவும் சதி செய்து நீதிமன்றத்தை நாட திட்டமிட்டிருக்கிறார்கள். அதை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவே முன்கூட்டியே மகளிர் உரிமைத் தொகை ரூ.5 ஆயிரத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கி இருக்கிறார். இது வரவேற்கத்தக்கது. இவ்வாறு அவர் கூறினார்.

இப்போராட்டத்தில் காங்கிரஸ் எம்எல்ஏ துரை சந்திரசேகர், தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவர்கள் சொர்ணா சேதுராமன், இமையா கக்கன், மாவட்டத் தலைவர்கள் டில்லி பாபு, ஆர்.எஸ். செந்தில், கராத்தே செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# ஆர்.கே.பேட்டையில் கோ.குமார் தலைமையில் அதிமுகவில் 300 பேர் இணைந்தனர்

ஆர்.கே.பேட்டை, பிப்.16-

திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் நாகப்பூண்டி கோ.குமார் தலைமையில், பைய விலாசா சரவணன் ஏற்பாட்டில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்.

அரக்கோணம் முன்னாள் எம்.பியும், கழக அமைப்புச் செயலாளருமான கோ. அரி முன்னிலையில் இணைந்த அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் நீலகண்டன், நகர இளைஞரணி செயலாளர் கேபிள் சுரேஷ், மாவட்ட நிர்வாகிகள் ஜி.பழனி, அகத்தியன், சிவகுமார், பார்த்திபன், சுஜாதா பழனி, பிரேமா குமரேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# அண்டர் 19 உலக கோப்பை வென்ற வருக்கு பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணாநிதி 10000 பரிசுத்தொகை வழங்கி பாராட்டினார்

பல்லாவரம், பிப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பல்லாவரம் 17வது வார்டு ஜெயலட்சுமி நகர் பகுதி சேர்ந்த தி பேஸ் தேவேந்திரன் அண்டர் 19 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து மற்றும் இந்தியா விளையாடி உலக கோப்பையை கைப்பற்றினார் இதையொட்டி பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவரை பாராட்டி சால்வை அணிவித்து ரூபாய் பத்தாயிரம் ரூபாய் பரிசாக வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தனர் உடன் 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, 17வது வட்டச் செயலாளர் பிரான்சிஸ் பால் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு பாராட்டினார்கள்





# ஊத்துக்கோட்டை பேரூராட்சி திமுக சார்பில் குடும்ப தலைவிகளுக்கு ஊக்கத்தொகை 5000.வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து பட்டாசு வெடித்து இனிப்புக்கள் வழங்கி கொண்டாட்டம்

திருவள்ளூர், பிப்.16-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒரு கோடியே முப்பத்தி ஒரு லட்சம் குடும்ப அட்டைதாரர்களில் மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்களுக்கு, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான 3,000 மற்றும் கோடைக்கால சிறப்பு உதவித்தொகையாக 2,000 என மொத்தம் தலா 5,000 அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது இந்த அறிவிப்பு பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதனை தொடர்ந்து தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஊத்துக்கோட்டை நகர திமுக சார்பில் அண்ணா சிலை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில், பேரூராட்சி தலைவர் கி.அப்துல்ரஷீத் அமைப்புச்சாரா ஒட்டுனர் அணியின் முன்னால் மாவட்ட அமைப்பாளரும் கவுன்சிலருமான கோல்டுமணி தலைமையில் சிறுபாண்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் சம்சுதீன் கவுன்சிவர்கள் கோகுல்கிருஷ்ணன், ஜீவா, திரிபூரசுந்தரிகோகுல் ,மற்றும் பேரூர் நிர்வாகிகள் நெடுஞ்செழியன், மோகன்பாபு, பாரூக், சுந்தர்ஏழுமலை, பேரூர் இளைஞரணி அமைப்பாளர் ரஹீம், துணை அமைப்பாளர் அருண், பாபு, மற்றும் சந்தோஷ், மகளீரணி ராணியம்மாள் முன்னிவையில் கொண்டாட்டம் நடைபெற்றது

பேரூர் நிர்வாகிகள் மற்றும் உரிமைத்தொகை பெற்ற பெண்கள் பட்டாசுகள் வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். பேருந்து பயணிகள், பாதசாரிகள் , இருசக்கர வாகணத்தில் சென்ற பொதுமக்கள் உள்ளிட்டோருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது இதனால் அப்பகுதியில் பரப்புகாணப்பட்டது

# பழனி சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக பாலன் அதிக வாய்ப்புள்ளதாக தகவல்

திண்டுக்கல், பிப்.16-

திண்டுக்கல் மாவட்டம் தமிழக வெற்றி கழகத்தின் பழனி சட்டமன்ற வேட்பாளராக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் நிற்பதாக பழனி வட்டாரப் பகுதிகளில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இந்த இளைஞர்கள், தொழில்நுட்ப அறிவு, புதிய சிந்தனைகள் மற்றும் சமூக மாற்றத்திற்கான ஆர்வத்துடன் அரசியலில் தடம் பதித்து, பழைய அரசியல் கலாச்சாரத்தை மாற்றும் நம்பிக்கையை புதிய சிந்தனை: பாரம்பரிய அரசியல் வழிகளில் இருந்து மாறுபட்டு, நவீன அணுகுமுறைகளை கொண்டு வருகிறார்.

மாற்றத்திற்கான முகம்: தொடர்ந்து சமூக சேவைகள் நலத்திட்ட உதவிகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்குதல் இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்பு ஏற்படும் நேரத்தில் தானாக முன்வந்து உதவிகள் மேற்கொள்ளுதல் மற்றும் கட்சி நிர்வாகிகளிடம் இயல்பாக பழகுதல் மற்றும் அவர்களுக்கு முன் வந்து உதவுதல் பொதுக்கூட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் உறுப்பினர் சேர்க்கை பிரச்சாரம் போன்ற கட்சியின் முக்கிய நிகழ்வுகளுக்கு முன்வந்து சிறப்பாக ஏற்பாடு செய்தல் பழனி வட்டார பகுதியில் தொடர்ந்து சமூக சேவை உதவிகள் மேற்கொள்ளும் இவருக்கு மாற்றுக் கட்சியிலும் நற்மதிப்பு உள்ளனர் தொடர்ந்து ஒரு சிலகட்சி நிர்வாகிகள் ப்ரொபைல் பிச்சர். ஸ்டோரி இன்ஸ்டாகிராம் . பேஸ்புக். டுவிட்டர் போன்றவைகளில் பாலாவின் படத்தை வைத்து பழனி சட்டமன்ற வேட்பாளரை என வைத்து கொண்டாடி வருகின்றன.. தமிழக வெற்றி கழக தலைமைச் செயலகத்தில் விருப்ப மனோ ஐந்தாறு நபர்கள் பெற்றதாக தகவல் ஆனால் ஆனால் அதிக வாய்ப்பு உள்ளதாக பாலனை பழனி நகர மக்கள் கூறி வருகின்றன





■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூர் ஊராட்சி வாலாகுளத்தில் அனுமதி இன்றி வண்டல் மண் அருளப்பட்ட காட்சி காவல் ஆய்வாளர் ஒருவருடன் நடந்துள்ள சமூக விரோதிகளுக்கு உடந்தையாக செயல்பட்டு வரும் காட்சி நடவடிக்கை எடுக்குமா மாவட்ட நிர்வாகம்



# ஊத்துக்கோட்டை அருகே ஆந்திரா எல்லையான சுருட்டபள்ளி சிவன் கோவிலில் மகா சனி பிரேதேச சிறப்பு விழா

திருவள்ளூர், பிப்.16-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே ஆந்திரா தமிழக எல்லையான சுருட்டபள்ளியில் அருள் பாலித்து வரும் ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வரர் சிவன் கோவில் இந்த ஆண்டின் முதல் மகா சனி பிரதோச விழா மிக விமர்சியாக நடைபெற்றது இந்த சிறப்பு பூஜையில் தமிழ்நாடு ஆந்திரா மாநிலங்களை சேர்ந்த திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு திருப்பதி சித்தூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தங்களுடைய குடும்ப நலன்களுக்காக சிறப்பு வழிபாடு அபிஷேக பூஜைகள் செய்து சாமி தரிசனம் செய்தனர் இந்த மகா சனி பிரோதோஷ விழாவிற்கு பொதுமக்கள் சாமிதரிசனம் செய்ய வசதியாக தமிழக போக்குவரத்து துறை சார்பில் மாதாவரம் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து சிறப்பு பேருந்துகக்கள் இயக்கப்பட்டது சாமிதரிசனம் செய்யவரும் பக்கதர்களின் அடிப்படை தேவைகள் மற்றும் பாதுகாப்புக்கு கோவில் செயல்அலுவலர் தலைமையில் கோவில் ஊழியர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்து இருந்தனர் எண்பது குறிப்பிட தக்கது

# 3 அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 இடம் கூடுதலாக கோரி சுகாதாரத் துறை மனு

சென்னை, பிப்.16-

தமிழகத்தில் 3 அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 இடங்களை அதிகரிக்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்திடம் தமிழக சுகாதாரத் துறை விண்ணப்பித்துள்ளது. நாமக்கல், திருவள்ளூர், திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 எம்பிபிஎஸ் இடங்களை அதிகரிக்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்திடம் தமிழ்நாடு மாநில மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி இயக்குநரகம் விண்ணப்பித்துள்ளது. அதற்கு தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்தால், நடப்பு ஆண்டு மருத்துவக் கலந்தாய்வில் அந்த கூடுதல் இடங்கள் சேர்க்கப்படும். தேவையான வசதிகள் உள்ளனதமிழகத்தில் கடந்த ஆண்டு 5,200 அரசு எம்பிபிஎஸ் இடங்களுக்கும், மதுரை எய்ம்ஸ் கல்லூரியில் 50 இடங்களுக்கும் மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டது. ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியிலும் கூடுதலாக இடங்களை பெறுவதற்குத் தேவையான வசதிகள் உள்ளன. ஆனால், தற்போது மதுரை எய்ம்ஸ் மாணவர்கள் அங்கு படித்து வருவதால், அந்த கல்லூரிக்கு கூடுதல் இடங்கள் கேட்டு விண்ணப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பன்னி அள்ளி புதூர் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை

காவேரிப்பட்டணம், பிப்.16-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் பன்னி அள்ளி ஊராட்சி பன்னி அள்ளி புதூர் கிராமத்தில் 2025 26 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 4 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமான கே.அசோக்குமார் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் பையூர் பெ.ரவி, நகர செயலாளர் விமல், ஒன்றிய துணை செயலாளர் விக்ரம் குமார் மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், முன்னாள் கவுன்சிலர் கணேசன், ஊர் கவுண்டர் சரவணன், மாவட்ட இலக்கிய அணி இணைச் செயலாளர் வெங்கடேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அன்பு, அண்ணா தொழிற்சங்க மண்டல தலைவர் முருகன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.எஸ் முருகன், அண்ணா தொழிற்சங்க கிளை செயலாளர் முருகன், மீனவரணி ஒன்றிய செயலாளர் பாலமுருகன்,

அம்மா பேரவை துணை செயலாளர் கௌரன், ஊர் தர்மகர்த்தா கிருஷ்ணன்,முன்னாள் கூட்டுறவு வங்கி தலைவர் சண்முகம், ஒன்றிய மாணவரணி துணை செயலாளர் பாலாஜி, கிளைச் செயலாளர்கள் ராமலிங்கம், ராமன் ,ஒன்றிய மாணவரணி துணை செயலாளர் காசி உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அறம் வளர்த்த நாயகி உடனாகிய ஐயாறப்பர் கோவிலில் ஐயாறப்பர் நாட்டியாஞ்சலி

தஞ்சாவூர், பிப்.16-

திருவையாறு அறம் வளர்த்த நாயகி உடனாகிய ஐயாறப்பர் கோவிலில் ஐயாறப்பர் நாட்டியாஞ்சலி அறக்கட்டளை சார்பில் மகா சிவராத்திரியை முன்னிட்டு தருமபுரம் ஆதினம் 27 வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமி களின் அருளாசியுடன் 24 வது ஆண்டு நாட்டியாஞ்சலி மூன்று நாள் விழா தொடங்கியது.

ஐயாறப்பர் நாட்டியாஞ்சலி விழாக்குழு தலைவர் பேராசிரியர் விஜயராமலிங்கம் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் முனைவர் குணசேகரன், இணைச் செயலாளர் சந்திரசேகரன், பொருளாளர் சீனிவாசன் முன்னிலை வகித்தனர். அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் வக்கீல் அந்தோணிசாமி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இதில் அறக்கட்டளை அறங்காவலர்கள் சாமிசம்பத்குமார், ராஜராஜன் குமணன், ரமேஷ்நல்லு, துணைச் செயலாளர குணசுந்தரம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






முதல் நாள் நிகழ்ச்சியில் தஞ்சை நிருத்யாஞ்சலி நாட்டிய கலாலயம் சென்னை சாய் பைன் ஆர்ட்ஸ், குரு : திருமதி. பார்கவி சுரேஷ் மும்பை நாட்டிய கலா நாட்டியாலயம், மும்பை சென்னை அபிநய வர்ஷினி ஸ்கூல் ஆஃப் மியூஸிக் டான்ஸ், , அபிநய நாட்டிய கலைக் கூடம், சென்னை. கரூர் நாதலய நாட்டிய கலாலயம், தஞ்சை ஆருத்ரா கலைக் கூடம், சென்னை நவரச நாட்டியாலயா, ஆனந்த நாட்டியாலயம், ஜெ.ஜெயலலிதா நாட்டியாலயா குழுவினர் நாட்டியாஞ்சலி செலுத்தினர்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திய மு.க. ஸ்டாலினுக்கு விழுப்புரம் மாவட்ட தூய்மைப் பணியாளர்கள் நெஞ்சார்ந்த நன்றி

கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பெட்டமுகிலாளம் ஊராட்சிக்குட்பட்ட மேலூர், தொலுவபெட்டா மற்றும் குல்லட்டி (கவனூர்) ஆகிய மலை கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்தமைக்கு மலைவாழ் மக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியை தெரிவித்துள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பெட்டமுகிலாளம் ஊராட்சிக்குட்பட்ட மேலூர், தொலுவபெட்டா மற்றும் குல்லட்டி (கவனூர்) முதலிய மலை கிராமங்களில் 653 இருளர் இன மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் அமைந்துள்ள சாலையானது மிகவும் குண்டும் குழியுமாக உள்ளது. மேலும், மழைக் காலங்களில் சேரும் சகதியுமாக உள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். மேலும், யானை மற்றும் வனவிலங்குகளால் பாதுகாப்பு இல்லாத நிலையில் இச்சாலையை நாள்தோறும் கடக்க வேண்டி உள்ளது.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பள்ளி, கல்லூரிக்கு செல்வதற்கும், பொதுமக்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் இச்சாலைகளை அமைக்கும் பணி மிகவும் அத்தியாவசியமாக இருந்தது. ஆனால் இச்சாலைகள் வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளதால் சாலைகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மிகவும் காலதாமதம் ஆனதால் இப்பகுதி மக்கள் ஒவ்வொரு கிராம சபை கூட்டத்திலும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை தெரிவித்து வந்தனர். மேலும், இப்பகுதி மக்களின் கோரிக்கையான சாலை வசதி அமைப்பது குறித்து தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் மற்றும் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் ஒவ்வொரு சட்டசபை கூட்டத்திலும் எடுத்துரைத்தனர்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடந்த 26.04.2025 அன்று கடைக் கோடி மலைகிராமமான தொலுவபெட்டா, காவனூர் ஆகிய கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சாலை வசதி வேண்டி மனு அளித்ததின்பேரில், இக்கிராமங்களை நேரில் பார்வையிட்டு, அரசுக்கு கருத்துரு தயார் செய்து தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என அக்கிராம மக்களிடம் உறுதியளித்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையின் பொருட்டு, மேலூர் முதல் தொலுவபெட்டா சாலை 0/0 4/740 கி.மீ தூரத்திற்கும், மேலூர் தொலுவபெட்ட சாலை முதல் குல்லட்டி (கவனூர்) சாலை வரை 0/05/0 கி.மீ தூரம் என மொத்தம் இரண்டு சாலைகளை அமைக்கும் பணிக்கு ஒசூர் மாவட்ட வனத்துறைக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றதையடுத்து, இச்சாலை பணிகளை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் 03.02.2026 அன்று துவக்கி வைத்தார்.




எனவே, பொதுமக்கள் தங்களது நீண்ட வருட கோரிக்கையான சாலை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது ஊர் சார்பாக நன்றியை தெரிவித்துள்ளனர்.



புதிய சாலை பணிகளின் பயன் குறித்து குல்மாதேஷ் (செல்:8903902821) தெரிவித்ததாவது:

நான் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கடைக் கோடி மலை கிராமமான பெட்டமுகிளாலம் ஊராட்சி, குல்லட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் கிராமம் அடர்ந்த வனப்பகுதியில் அமைந்துள்ளது. எங்கள் கிராமத்தில் சுமார் 100 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகிறோம். இந்நிலையில், அய்யூர் பிரிவு சாலையிலிருந்து எங்கள் கிராமமான குல்லட்டி வரை சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு இதுவரை சாலை வசதி கிடையாது. மண் சாலையில்தான் தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று வந்தோம். மேலும், எங்கள் கிராமம் அடர்ந்த வனப்பகுதியில் உள்ளதால், யானை உள்ளிட்ட வனவிலங்குகளின் அபாயத்தை எதிர்கொள்கிறோம். எங்கள் கிராம மக்கள் தங்களது நிலத்தில் ராகி, அவரை உள்ளிட்டவை பயிர் செய்து வருகின்றனர். இங்குள்ள விளைபொருட்களை தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளுக்கு எடுத்துச்செல்ல சாலையே இல்லாத நிலையில் எங்களின் விளைபொருட்களை மிகுந்த சிரமத்துடன் விற்பனை செய்ய கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. மேலும், எங்கள் கிராமத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் இம்மண்சாலை வழியே தான் பள்ளி மற்றும் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தனர். இந்நிலையில் இம்மண்சாலையை தார்சாலையாக அமைத்து தர நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்திருந்தோம். தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்கள் கிராம மக்கள் நிலையை அறிந்து புதிய தார்சாலை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். கடைக்கோடி மக்களுக்கும் அரசின் அனைத்து திட்டங்களும் கிடைக்க வேண்டும் என்று சிறப்பாக செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் கிராம மக்கள் சார்பாக

நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். புதிய சாலை பணிகளின் பயன் குறித்து குல்லட்டி கிராமத்தைச் சேர்ந்த முனிராஜ் (செல்:9047929569) தெரிவித்ததாவது:



நான் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மலைக்கிராமமான குல்லட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். அய்யூர் பிரிவு சாலையிலிருந்து எங்கள்



கிராமத்திற்கு சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு இதுவரை சாலை வசதியே கிடையாது. மேலும் எங்கள் கிராமம் அடர்ந்த வனப்பகுதியில் உள்ளதாலும், வனத்தில் யானைகள் இருப்பதாலும், பொது மக்கள் அச்சத்துடன் சாலையில் சென்று வர வேண்டியுள்ளது. மேலும், கர்ப்பிணி தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்று வர இயலாத நிலை உள்ளது. நாங்கள் விவசாயிகளாகவே இருந்தாலும் எங்கள் கிராம பகுதியில் உள்ள மாணவர்கள் கல்லூரி வரை படித்து வைத்து வருகிறோம். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்கள் கிராமத்திற்கு புதிய சாலை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். இது எங்கள் கிராம மக்களுக்கு மிகப்பெரிய பேருதவியாக அமைந்துள்ளது. இதுவரையில் சாலை வசதியே கண்டிராத எங்கள் கிராமத்திற்கு சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எங்கள் மலைவாழ் மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொகுப்பு**
**சு.மோகன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**



## திருத்தணி மலைக்கோயிலில் ஆட்டோக்களுக்குத் தடை: 70 பேர் கைது

திருத்தணி, பிப்.16-

திருத்தணி முருகன் கோயில் மலைப்பாதையில் ஆட்டோக்கள் செல்ல விதிக்கப்பட்ட தடையைக் கண்டித்து, சி.ஐ.டி.யு ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் கரிமுல்லா தலைமையில் திரண்ட 70க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், தடையை நீக்க வலியுறுத்தி கோஷமிட்டனர். போராட்டக்காரர்களைக் கைது செய்த போலீசார், அவர்களைத் திருக்கோயில் பேருந்தில் ஏற்றிச் சென்று காவல் துறை தங்கும் விடுதியில் அடைத்தனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## பூண்டிகிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கச்சூரில் பாஜக மற்றும் அதிமுகவை கண்டித்து கண்டன ஆற்பாட்டம்

சென்னை, பிப்.16-

தமிழக முதல்வரின் ஆணைக்கிணங்க திமுக சார்பில் மத்திய அரசையும், கூட்டணி கட்சியான அதிமுகவை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதுஇதன் ஒரு பகுதியாக திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பூண்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி. கே.சந்தி ரசேகர் தலைமையில் கச்சூர் பஜாரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





இதில் சிறப்பு அழைப்பாளராக ஒப்பிலா மணி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சுமன் ஆகியோர் கலந்து கொண்டு அண்மையில் மத்திய அரசு

தாக்கல் செய்த பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும், விவசாயிகளுக்கு எதிராக கொண்டு வந்துள்ள அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தை கைவிட வலியுறுத்தியும், இதற்குத் துணை போகும் அதிமுகவை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர் ஆர்ப்பாட்டத்தில் இந்திய கூட்டணி கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## காங்கேயம் கல்வி நிறுவனங்கள் Elantara'26 தேசிய அளவிலான இடைக்கல்லூரி கலாச்சாரத் திருவிழா

காங்கேயம், பிப்.16-

காங்கேயம் தொழில்நுட்பக் கல்லூரி காங்கேயம் வணிகவியல் கல்லூரி மற்றும் காங்கேயம் மருந்தியல் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய கல்வி நிறுவனங்களின் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 மற்றும் 14ஆம் தேதிகளில் நடைபெற்ற ElantarA'26 தேசிய அளவிலான இடைக்கல்லூரி கலாச்சார விழாவினால் உற்சாகம் கலைநயம் மற்றும் இளமை துடிப்பால் ஒளிந்தன.50 க்கும் மேற்பட்ட போட்டிகள் 5000க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்பு ரூபாய் 1 லட்சம் மதிப்பிலான பரிசுகள் ஆகிய சிறப்பம்சங்களுடன் ElantarA' 26 இப்பகுதியில் மிகச் சிறப்பான மற்றும் சுறுசுறுப்பான கலாச்சார கொண்டாட்டமாக திகழ்ந்தது பல்துறை திறமைகளை வெளிப்படுத்தும் அபூர்வ மேடையாக இது அமைந்தது.



திறமை புதுமை மற்றும் கொண்டாட்டத்தின் திருவிழா. ElantarA'26 கலை அறிவு நிர்வாக திறன் இசை மற்றும் திரைப்படத்துறைகளில் பல்வேறு வடிவங்களில் ஆன படைப்பாற்றலை கொண்டாடும் வகையில் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது விழாவில் இடம் பெற்ற முக்கிய நிகழ்ச்சிகள் விவாத போட்டி, நடனப் போட்டிகள், குறும்பட போட்டி, தலைமை திறன் சோதனை, வணிக அறிவுப் போட்டி, பாரம்பரிய உடை அணிவகுப்பு, கவிதை வாசிப்பு, கிரியேட்டிவ்ரீல் தயாரிப்பு, கேம் அடிப்படையிலான போஸ்டர், இசை சவால், குரல்- கருவி இசை, முக ஓவியம் மண்பானை ஓவியம் நகைகளை மெஹந்தி தயாரிப்பு அறிமுக சிமுலேஷன் கணித விளையாட்டுக்கள் ஆகியவை இடம் பெற்றன. இவ்விழா அறிவாற்றலையும் கலாச்சார வண்ணத்தையும் ஒருங்கிணைத்து முழுமையான கல்வி மற்றும் ஆளுமை மேம்பாட்டுக்கான நிறுவனங்களின் அர்ப்பணிப்பை வலியுறுத்தியது.

இசை மகத்துவமும் திரையுலக நட்சத்திரங்களும் தொடக்க நாளில் நிகழ்ச்சி தொகுப்பாளர்களாக VJ கல்யாணி மற்றும் நவீன் முரளிதரன் திகழ்ந்து தங்கள் உற்சாகமான நிகழ்ச்சி தொகுப்பின் மூலம் இவ்விழாவை உற்சாகமாக முன்னெடுத்தனர்.

இதில் சிறப்பு விருந்தினர்கள் ஆரிக் அர்ஜுனா இளைஞர் முன்னேற்றம் குறித்து ஊக்க உரை நிகழ்த்தினார். பரத் நிவாஸ் சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்தினார் நக்கலைட்ஸ் பிரசன்னா மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நிகழ்த்தினார். அதர்வா ஊக்கமளிக்கும் முறை நிகழ்த்தினார். ப்ரீத்தி முகுந்தன் சிறப்பு விருந்தினர் உரை மற்றும் பாராட்டு நிகழ்வு நிகழ்த்தினார் இதில் ஸ்ரீதர் மாஸ்டர் மற்றும் அவரது குழுவினர் வழங்கிய ஆற்றல்மிக்க நடன நிகழ்ச்சி பார்வையாளர்களை கவர்ந்தது. முதல் நாளில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் சத்திய பிரகாஷ் மற்றும் ஸ்ரீதர் சேனா ஆன்மாவை தொடும் குரல் நிகழ்ச்சி நிகழ்த்தினார் சஞ்சனா கல்மாஞ்சி இனிமையான பாடல் வளங்கள் வழங்கி அனைவரையும் மகிழ்வித்தார் சுபலட்சுமி இசை நிகழ்ச்சி நடத்தி அனைவரையும் கிரங்கடித்தார். 15 உறுப்பினர்களைக் கொண்ட ஆட்டம் பேங்க் வழங்கிய இசை நிகழ்ச்சி மற்றும் நடன குழுவின் அதிரடி நடனம் விழாவை உற்சாகமாகியது. இதில் பிரபலங்கள் வருகை புரிந்து உரைகள் வழங்கினர். ராஜு ஜெயமோகன் சிறப்புரை வழங்கினார் கேன் கருணாஸ் கலந்துரையாடல் நிகழ்த்தினார் அனுஷ்மா அணில் குமார் பிரபல உரை நிகழ்த்தினார் சின்ன தமிழா மேடை உரை வழங்கினர் ஈஸ்வர் சாந்தலட்சுமி சிறப்பு உரை நிகழ்த்தினார் மீனாட்சி தினேஷ் மாணவர்களுடன் கலந்து உரையாடினார RJ பாலாஜி ஊக்குமளிக்கும் உரை வழங்கினார் ஐஸ்வர்யா லட்சுமி சிறப்பு விருந்தினர் உரை வழங்கினர் இறுதியாக டிஜே லாஸ் வழங்கிய டிஜே நிகழ்ச்சி விழாவை சிறப்பாக நிறைவு செய்தது. ElantarA'26 நிகழ்ச்சியின் வெற்றிகரமான நிறைவேற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்கள் மாணவர் ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாட்டுக் குழுக்கள் மற்றும் தன்னார்வலர்களின் சிறப்பான ஒத்துழைப்பு வெளிப்படுத்தியது.

கலாச்சார வரலாற்றில் ஒரு மைல்கள். ElantarA'26 ஒரு சாதாரண விழா அல்ல அது இளமை துடிப்பு கலைத்திறன் திரையுலகம் மகிமை மற்றும் அறிவுத்திறன் ஆகியவற்றின் மாபெரும் கொண்டாட்டமாக அமைந்தது பல்வேறு கல்வி நிறுவனங்களை ஒன்றிணைத்து இளம் திறமைகளுக்கான தேசிய மேடையை உருவாக்கியதோடு மாணவர்களிடையே ஒற்றுமை மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை வளப்படுத்தியது. இதில் காங்கேயம் கல்விக் குழுமத்தின் தலைவர் திரு N. ராமலிங்கம் செயலாளர் திரு CK வெங்கடாசலம் தாளாளர் திரு S. ஆனந்த் வடிவேல் பொருளாளர் CK பாலசுப்பிரமணியம் காங்கேயம் கல்வி குழுமங்களில் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் RV மகேந்திர கௌடா காங்கேயம் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் S. ராஜ்குமார் காங்கேயம் வணிகவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் S. சுரேஷ் காங்கேயம் மருந்தியல் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் S. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். மிகுந்த பங்கேற்பு ஆற்றல் மிக்க நிகழ்ச்சியில் மற்றும் பிரபலங்களின் வருகையுடன் ElantarA'26 இடைக்கல்லூரி கலாச்சார விழாக்களில் புதிய தரத்தை உருவாக்கியுள்ளது.



## பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் மார்ச் 1ல் பிறந்தநாள் காணும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஆட்டோ ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவி

தாம்பரம், பிப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் மார்ச் 1ல் பிறந்தநாள் காணும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆட்டோ ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப் பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், 5வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் பெருங்களத்தூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் டி.ஆர்.கோபி, ஜா.ரவிக் குமார், ஆர்.செல்வகுமார், இரா.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் சுரேஷ், பெரியநாயகம், கொடி தாமோதரன், வட்ட செயலாளர்கள், மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஆட்டோ நிர்வாகிகள் மற்றும் கழகத் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்





## தமிழக வெற்றி கழகம் மூன்றாம் ஆண்டு துவக்க விழா

நிலக்கோட்டை, பிப்.16-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் தமிழக வெற்றி கழகம் நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி சார்பாக மூன்றாம் ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. நிலக்கோட்டை மத்திய ஒன்றிய செயலாளர் ராஜா தலைமையில் நடைபெற்ற நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் அய்யனார் முன்னிலை வகித்தார். தமிழ் தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் ஒன்றிய பொறுப்பாளர்கள் விழா வரவேற்றுப் பேசினர். சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் மத்திய மாவட்ட செயலாளர் வாசுதேவன் மற்றும் மாவட்ட பொருளாளர் மகாராஜன் விக்கி கலந்துகொண்டு எழுச்சி உரையாற்றினர். மேலும் இவ்விழாவில் மாற்றுக் கட்சியில் இருந்து இணைந்த தொண்டர்களுக்கு கட்சி துண்டு சால்வை அணிவித்து கட்சியில் இணைத்துக் கொண்டனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாக நலிவுற்றவர்களுக்கு ஆடு மற்றும் நலத்திட்ட உதவிகளும் வழங்கினர். தமிழக வெற்றி கழகம் நிலக்கோட்டை ஒன்றிய முக்கிய பொறுப்பாளர்களான பங்களாப்பட்டி சீனிவாசன், வடக்கு ஒன்றிய இணைச் செயலாளர் சாமிகணேசன், உள்ளிட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள், நகர நிர்வாகிகள், கிளை பொறுப்பாளர்கள், மகளிர் அணியினர் என ஏராளமான கலந்து கொண்டனர்



## மழலையர் பட்டமளிப்பு மற்றும் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது

கீழக்கரை, பிப்.16-

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கண்ணாடி வாப்பா சர்வதேசப்பள்ளியின் 12 வது மழலையர் பட்டமளிப்பு உடன் ஆண்டு விழாவானது கடந்த 14.02.2026 சனிக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக மஹாராஜா குழுமத்தின் நிறுவனர் முனைவர் ஆசிப் அலி பங்கேற்றார். பள்ளியின் நிர்வாக அறங்காவலர் மர்யம் செய்யது ஜலாஹூதீன்,பள்ளியின் அறங்காவலர்களான முனைவர் சதக்கத்துல்லா முனைவர் முகமது அப்துல் காதர் முன்னிலையில் பள்ளி முதல்வர் பிரமோதா மேனன் வரவேற்புரை நிகழ்த்தி , ஆண்டுவிழாவை தொங்கிவைத்தார். வண்ணத்துப்பூச்சியின் சிறகைப் போல இளந்தளிர்களின் வரவேற்பு நடனம் , நமது பண்பாட்டை பறைசாற்றும் வகையிலும் நம் ஒற்றுமையை உணர்த்தும் வகையிலும் ஒவ்வொரு மாநிலங்களின் ஆடை அலங்கார வகுப்பு, கருத்தை உணர்த்தும் நாடகங்கள், கண்ணைக்கவர்ந்திழுக்கும் வண்ணத்தில் மெய் சிலிர்க்கும் நடனங்கள் என வியத்தகு ஆற்றலை மாணவர்கள் வெளிப்படுத்தினர். நடப்பாண்டு கல்வி நிலையில் மேம்பட்ட மாணவமாணவிகளுக்கும் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. விழா நிகழ்வினை பள்ளி நிர்வாக அலுவலர் முகமது அன்சார் ஒருங்கிணைத்தார் .



## அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவில் மயான கொள்ளை திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம் - பக்தர்கள் திரளான பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.16-

கிருஷ்ணகிரி பழையபேட்டை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவிலில், மயான கொள்ளை திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது. இதையொட்டி, நேற்று காலை கொடியேற்றுதல், கங்கனம் கட்டுதல், முளைபாரி எடுத்தல், யாகசாலை பிரவேசம், மகா கணபதி ஹோமம், அஷ்ட திக்பாலகர் பரிவாரி பூஜை மற்றும் அம்மனுக்கு பொங்கலிடுதல் ஆகியவை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இரவு 7 மணிக்கு பக்தி பாடல் நிகழ்ச்சி நடந்தது.

இன்று(பிப். 16) இரவு 8 மணிக்கு மஹா சிவராத்திரி விழாவையொட்டி, சக்தி கரகம், பச்சை கரகம், கங்கையில் நீராடிவிட்டு சன்னதி பிரவேசம் அடைதல், இரவு 7 மணிக்கு இன்னிசை கச்சேரி நடக்கிறது. நாளை காலை 3 மணிக்கு, முகவெட்டு மயானத்திற்கு எடுத்து செல்லும் நிகழ்ச்சியும், 6.30 மணி முதல் பக்தர்களுக்கு அலகு குத்தும் நிகழ்ச்சியும், மதியம், அம்மன் தேர் பூத வாகனத்தில் மயான கொள்ளைக்கு புறப்படும் நிகழ்வும் நடக்கிறது.

18 மாலை 6 மணிக்கு, விடாய் உற்சவம், அம்மனை ஊஞ்சலில் வைத்து தாலாட்டும் நிகழ்ச்சியும், 19 மாலை 6 மணிக்கு, அக்னி குண்டம் தீமிதி விழாவும், 20 காலை 11 மணிக்கு, அம்மையப்பன் திருக்கல்யாணமும், மாலை 3 மணிக்கு, அம்மையப்பன் திருவீதி உலாவும், மஞ்சள் நீராட்டு விழாவும் நடக்கிறது. 21 இரவு கும்ப பூஜை, அன்னதானம், கொடி இறக்குதலுடன் விழா நிறைவு பெறுகிறது.

காவேரிப்பட்டணம் தாம்சன் பேட்டை ஸ்ரீபூங்காவனத்தம்மன் கோவிலில், நேற்று மஹா சிவராத்திரியும், இன்று பகல் 2 மணிக்கு மேல் அம்மன் மயான கொள்ளைக்கு புறப்படும் நிகழ்ச்சியும் நடக்கிறது. இதில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

காவேரிப்பட்டணம் பன்னீர் செல்வம் தெருவில் அமைந்துள்ள அங்காளம்மன் கோவில் புனரமைப்பு பணிகள் நடந்து வருவதால் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும், அம்மன் மயான கொள்ளைக்கு புறப்படும் நிகழ்ச்சி நடக்கவில்லை. இதனால் பக்தர்கள் அதிருப்தியில் உள்ளனர்.



## செம்பாக்கம் நன்மங்கலம் ஏரி வனம் நீர்நிலை பாதுகாப்பு அமைப்பு சார்பில் மாற்று திறனாளிகள் உள்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட பங்கு பெற்ற வாக்கத்தான் நிகழ்ச்சி

சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, அரவிந்த் ரமேஷ் கொடி அசைத்து துவக்கி வைத்து

தாம்பரம், பிப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கம் பகுதியில் நன்மங்கலம் ஏரி வனம் நீர் பாதுகாப்பு அமைப்பு சார்பில் மாற்று திறனாளி கல்லூரி மாணவர்கள் பொது மக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலந்து கொண்ட வாக்கத்தான் நிகழ்ச்சியை கொடி அசைத்து துவக்கி வைத்த தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ், ஆர்,ராஜா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் இந்த வாக்கத்தான் விழிப்புணர்வு பேரணி செம்பாக்கத்தில் தொடங்கி வைத்தனர்.

இந்த பேரணி செம்பாக்கம், நன்மங்கலம் ஏரி வழியாக ஐந்து கிலோ மீட்டர் தூரம் வரை நடைபெற்றது.

இதில் நீர் நிலைகள் பாதுகாப்பு குறித்தும் நீர் நிலைகளை பாதுகாப்பு குறித்தும் கோஷங்கள் எழுப்பியவாரு கையில் பதாகைகள் ஏந்தியவாறு சென்றனர் முன்னதாக வனங்களை காப்போம் நீர்நிலைகளை காப்போம் என உறுதிமொழி ஏற்றனர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் கிரிஜா சந்திரன், நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு தலைவர் மாதாஜி, செயலாளர் ஜெயப்பிரியா, பொருளாளர் சிவசங்கரி 1000க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்



## ரம்ஜான் பண்டிகை: 205 உலமாக்களுக்கு நலத்தொகுப்பு வழங்கிய மதியழகன் எம்.எல்.ஏ

கிருஷ்ணகிரி, பிப்.16-

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு கிருஷ்ணகிரி வெல்கம் மகாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தலைமை அரசு முக்தி காஜி கலீல் அஹ்மத் தலைமையில், கிருஷ்ணகிரி மாவட்ட திமுக மற்றும் நகர திமுக சார்பில் 205 உலமாக்களுக்கு அரிசி மற்றும் கோதுமை மாவு உள்ளிட்ட நலத்தொகுப்புகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு உலமாக்களுக்கு நலத்தொகுப்புகளை வழங்கினார். ரம்ஜான் மாதத்தின் ஆன்மீக சிறப்பை எடுத்துரைத்து, சமூக ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை பேணுவது அவசியம் என அவர் பேசினார்.

இந்த நிகழ்வில் திமுக நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, பூரா மஸ்ஜித் முன்னாள் தலைவர் ஜாவித் பாஷா, எஸ்.டி.பி.ஐ மாவட்ட தலைவர் அஸ்கர், தவுலதாபாத் தலைவர் முஸ்தபா, கௌஸ் சரிப், கவுன்சிலர்கள் மத்தின், முகமது அலி, சீனிவாசன், அலிஷா முகமது ஜான், பிரத்தோஸ்கான் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் அனைத்து மஸ்ஜித் உலமாக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பல்வேறு வார்டுகளில் நல திட்ட பணிகளை பல்லாவரம் எம்.எல்.ஏ இ.கருணாநிதி மக்கள் பயன்பாட்டிற்க்கு திறந்து வைத்தார்

பல்லாவரம், பிப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு வார்டுகளில் பொதுமக்கள் நலத்திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன அதன் வகையில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 38வது வார்டில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாயவிலை கடை அமைக்கப்பட்டது. தொடர்ந்து 27வது வார்டில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் மேலும் ஒரு நியாயவிலை கடையும் கட்டப்பட்டது.



மேலும், 37வது வார்டில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் காயத்திரி நகர் பகுதியில் மக்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கண்காணிப்பு கேமரா அமைக்கப்பட்டு, அதன் பயன்பாட்டை பல்லாவரம் சட்ட மன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்கள் திறந்து வைத்து பொதுமக்கள் பயன் பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்த பணிகள் மூலம் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதால், பகுதி மக்கள் நன்றியை தெரிவித்தனர். அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் இ.எஸ். பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன், மாவட்ட பிரதிநிதி ரமேஷ், மாமன்ற உறுப்பினர்கள், மகாலட்சுமி கருணாகரன், சரண்யா மதுரைவீரன், மகேஸ்வரி கார்த்திகேயன், பகுதி அமைப்பாளர் டில்லி பாபு, மாணவர் அணி துணை அமைப்பாளர் இளவரசன், இளைஞரணி துணை அமைப்பாளர் யோகேஷ், வட்டக் கழகச் செயலாளர்கள் பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

## காவேரிப்பட்டணம் தாம்சன்பேட்டைபூங்காவனத்தம்மன் அங்காளம்மன் கோவிலில்கொடியேற்றத்துடன் துவங்கியது மகா சிவராத்திரி விழா

காவேரிப்பட்டணம், பிப்.16-

காவேரிப்பட்டணத்தில் தாம்சன் பேட்டையில் அமைந்துள்ள பூங்காவனத் தம்மன் கோயில்களில் மயான சூறை விழா துவங் கியது. முன்னதாக நேற்று கணபதி ஹோமம், பொங்கல் வைத்தல், அபிஷேக ஆராதனையும் நந்தி வாகன உற்சவம் மற்றும் கொடியேற்றத்துடன் துவங்கியது.

இன்றுமகா சிவராத்திரி முன்னிட்டு பெண் பூத வாகன உற்சவம் மற்றும் தூர்வாசகர்வ பங்க நாடகம் நடைபெறும்,

16.2.26 அன்று காலை 3 மணி முதல் முகவெட்டு மற்றும் 108 தீர்த்த பால்குடம் அபிஷேகம், மயான சூறை மூலவர் அலங்காரம்,காலை 6:00 மணி முதல் அலகு போட ஆரம்பித்தல் ஆண் பூத வாகனத்தில் மதியம் மூன்று மணி அளவில் அம்மன் மயான சூறை ரதத்தை கழக துணை பொதுச்செயலாளர் கே பி முனுசாமி அவர்கள்துவக்கி வைத்தல்,இரவு 7 மணிக்கு வான வேடிக்கை மற்றும் இரவு 12 மணிக்கு அம்ம னுக்கு தாலாட்டு, 17.2.26 அன்று விடா கஞ்சி, அன்னதானம் வழங்கப்படும், 18.2.26 அன்று அக்னிகுண்டம் பூமிதிஅம்மன் சிம்ம வாகனத்தில் வீதி உலா மற்றும் அன்னதானம், 20.2.26 அன்று அம்மையப்பன் திருக்கல்யாணம் திருமண விருந்து நடைபெறும், 21.2.26அன்று மஞ்சள் நீராட்டு நையாண்டி மேளம் தொடர் புஷ்ப பல்லக்கில் சிம்ம வாகனத்தில் அம்மன் வீதி உலா, 22.2.26அன்று அம்மனுக்கு கும்ப பூஜை, இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் பருவத ராஜ குலத்தினர் மற்றும் பூங்காவனத்தம்மன் ஆலய இளைஞர்கள் குழு மற்றும் ஊர் பொதுமக்கள், மற்றும் , அங்காளம்மன் கோவில் தர்மகர்த்தாக்கள்ஆகியோர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்



Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161